AMNESTY INTERNATIONAL

30 மே 2016

AI குறியீடு: ASA 37/4146/2016

இலங்கை: உண்மைக்கான உரிமை; நீதிக்கான, இழப்புகளைச் சரிசெய்வதற்கான மற்றும் மீண்டும் நிகழாமல் பார்த்துக்கொள்வதற்கான உரிமை

ஐ.நா மனித உரிமைக் கழகத்தின் 32வது வழக்கமான அமர்வுக்கு அளிக்கப்பட்ட எழுத்துப்பூர்வமான அறிக்கை (13 ஜூன் – 1 ஜூலை 2016)[1]

அக்டோபர் 2015-ல்[2] *இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புடைமை மற்றும் மனித உரிமை ஆகியவற்றை ஊக்குவிக்கும்* ஐ.நா மனித உரிமைகள் கழகத்தின் 30/1 தீர்மானத்தை இலங்கை அரசும் சேர்ந்து கொண்டு வந்த போது அது மனித உரிமை மீறல்களாலும், சர்வதேச சட்டத்தின் கீழ்வரும் பிற குற்றங்களாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையையும், நீதியையும், இழப்புகளைச் சரிசெய்து கொடுப்பதையும், பாதிப்புகள் மீண்டும் ஏற்படாது என்ற உத்திரவாதத்தையும் அளிக்கும் ஒரு லட்சிய செயல்திட்டத்தை உருவாக்கியது.[3] இந்தத் தீர்மானத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்குறுதிகளில் ‘பலவந்தமாக காணாமல் போகச் செய்தல்’ என்ற உள்நாட்டுப்போரின் ஒரு முக்கிய அம்சத்திற்கு தீர்வு காணும் முயற்சிகள் உள்ளடங்கியிருந்தன. இந்தச் செயலை ஒரு குற்றமாக அறிவித்து, பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யும் நடவடிக்கையில் இருந்து அனைத்து நபர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் ஐ.நாவின் உடன்படிக்கையை ஏற்புறுதி செய்து, காணாமல் போன தங்களுடைய உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்த உண்மையை குடும்பங்கள் அறிந்து கொள்ள உதவும் புதிய அமைப்புகளையும், செயல்முறைகளையும் உருவாக்குவதன் மூலமும், நடந்திருக்கும் குற்றங்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்வதன் மூலமும், பாதிப்படைந்த வாழ்க்கைகளையும், வாழ்வாதாரங்களையும் மீண்டும் கட்டி எழுப்புவதில் உதவுவதன் முலமும் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பலவந்தமாக காணாமல் போகச் செய்யும் நடைமுறையை ஒழிக்க முயற்சிகள் மேற்கொள்ளுதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் நிவாரணங்களை வழங்குதல் போன்றவை இலங்கை மக்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியமானவை ஆகும்.

2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த, இலங்கை அரசாங்கப் படைகளுக்கும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இடையேயான நீடித்த ஆயுதத் தாக்குதலின் விளைவாக நிகழ்ந்திருக்கக்கூடிய மோசமான வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்கள் உண்மையை அறியவும், நீதியைப் பெறவும் காத்துக்கொண்டிருக்கின்றனர். மேலும் அவர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குகளுக்கான இழப்பீடுகளையும்,

---

[1] **குறிப்பு** இந்த ஆவணத்தில், வார்த்தை-எண்ணிக்கை வரம்பு காரணமாக மனித உரிமைக் கழகத்திடம் சமர்ப்பித்த பதிப்பில் இல்லாத அடிக்குறிப்புகள் போன்ற கூடுதல் உரைப்பகுதிகள் இருக்கின்றன..

[2] இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புடைமை மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை ஊக்குவித்தல், A/HRC/RES/30/1, 14 அக்டோபர் 2015, பத்தி. 4.

[3] இலங்கை(OISL) மீதான OHCHR விசாரணை அறிக்கையில் விவரிக்கப்பட்டவாறு, பரிந்துரை 20, பக்கம் 251, 16 செப்டம்பர் 2015 A/HRC/30/CRP.2. பின்வரும் இணையதளத்தில் கிடைக்கப்பெறுகிறது: http://un.lk/news/zeid-urges-creation-of-hybrid-special-court-in-sri-lanka-as-un-report-confirms-patterns-of-grave-violations/

இவை மீண்டும் நிகழாது என்ற திறன்வாய்ந்த உத்திரவாதத்தையும் எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருக்கின்றனர். இலங்கையில் ஆயுதத் தாக்குதலுக்கு முன்பும், ஆயுதத்தாக்குதலின் போதும் மற்றும் ஆயுதத்தாக்குதலுக்குப் பின்பும் நிகழ்த்தப்பட்ட பெரும்பாலான வன்கொடுமைகள் திறம்பட விசாரிக்கப்படவில்லை . குற்றவாளிகளின் மீது வழக்கு தொடரப்படவில்லை மற்றும் போலீஸ் காவலில் தண்டனையின்றி சித்திரவதை தொடர்ந்து நீடிக்கிறது.[4]

எதிர்காலத்தில் அரசாங்கத்தின் அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் சீர்திருத்தங்கள் கொண்டுவருவதற்கு சிறீசேனா அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது மற்றும் இந்தப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் பொதுமக்களிடம் ஆலோசனைகளைக் கேட்டறிந்தது. மேலும் இந்த ஆலோசனைகளில் பங்கேற்ற பொதுமக்கள் இதைப் புகழ்ந்துரைத்துள்ளனர். ஆனால் அரசாங்கத்தின் இந்த விரிவான சீர்திருத்தச் செயல்திட்டம் தெளிவின்றி இருப்பதாகவும், தங்களுடைய உறவினர்கள் காணாமல் போவதற்கு முன்பு இராணுவத்தின் காவலில் இருந்ததாக பரணகாமா ஆணையத்திடம்[5] சாட்சியளித்த குடும்பங்களின் புகார்களுக்கு இது தீர்வு அளிக்கவில்லை எனவும் காணாமல் போனவர்களின் குடும்பங்களும், சமூக ஆர்வலர்களும் மற்றும் பிற சாதாரண இலங்கை மக்களும் கூறுகின்றனர். இடம்பெயர்தலால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து மீண்டுவர முயற்சிக்கும் மக்களுக்கான உதவிகள் கிடைக்கப்பெறாமல் இருப்பது மற்றும் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களை திரும்ப அளிப்பது போன்ற பிரச்சினைகளுக்கும் இது தீர்வு அளிக்கவில்லை. ஆம்னெஸ்டி இண்டர்நேஷனலின் சமீபத்திய இலங்கை வருகையின்போது, அது வடக்கு வள்ளிக்காமம், யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு பயணம் மேற்கொண்டது, அங்கு இடம் பெயர்ந்த குடும்பங்கள் இப்போதும் தற்காலிகமான குடிசைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர், மேலும் தங்களுக்கு எந்தவித உதவிகளும் கிடைக்கப்பெறவில்லை எனவும் அம்மக்கள் தெரிவித்தனர்.

தங்களுடைய மனித உரிமைகள் தொடர்பான கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும் என பல ஆண்டுகளாக காத்திருக்கும் இலங்கை மக்களின் நல்லெண்ணத்தை அரசாங்கம் கலைத்துவிடக்கூடாது. அரசாங்கம் சீர்திருத்த முயற்சிகளின் வேகத்தையும், வெளிப்படையான தன்மையையும், புலப்படும் தன்மையையும் அதிகரித்து இவை அனைத்து சமூகத்தைச் சார்ந்த மக்களின் நியாயமான ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகிறது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

அரசாங்கம் தனது வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற அதிகக் காலம் ஆகும் என்பதை ஆம்னெஸ்டி இண்டர்நேஷனல் புரிந்துகொள்கிறது. எனினும், பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அரசாங்கம் முன்னேற்றத்தை உருவாக்க வேண்டும், இது அரசாங்கத்தின் சீர்திருத்த முயற்சிகளிலேயே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

இலங்கை அரசாங்கம் பின்வருமாறு தொடங்க வேண்டும்:

- *உரிய நேரத்தில் போதுமான நிதி மற்றும் இடம் பெயர்வு தொடர்பான ஆதரவை அளித்தல், இடைக்கால நீதி வழங்கும் அமைப்புகளை வடிவமைப்பது தொடர்பாக பொதுமக்கள் ஆலோசனைகள் அளிப்பதற்கு வசதி செய்து கொடுத்தல் மற்றும் அது குறித்து விளம்பரப்படுத்துதல் மற்றும் இந்தச் செயல்முறையானது திறன்வாய்ந்த சாட்சிப்பாதுகாப்பை அளிக்கிறது என்பதை உறுதி செய்தல்*

---

[4] சித்திரவதை மற்றும் மற்ற வகையில் கொடுமையாகவும், மனிதாபிமானம் இல்லாமலும், இழிவாகவும் நடத்தப்படுதல் அல்லது தண்டிக்கப்படுதல் குறித்த சிறப்பு விசாரணை அலுவலரின் முதற்கட்ட கூர்நோக்குப் பார்வைகள் மற்றும் பரிந்துரைகள், திரு. ஜூவன் ஈ. மெண்டஸ், கொழும்பு, 7 மே 2016, பக்கம்.3

[5] முறைப்படியாக இது “பலவந்தமாக கடத்தப்படுதல் மற்றும் காணாமல் போகச் செய்தல் தொடர்பான புகார்கள் மீதான அதிபரின் விசாரணை ஆணையம்” ஆகும் , இது அதிபர் மகிந்தா ராஜபக்சே அவர்களால் உருவாக்கப்பட்டு அதிபர் சிறீசேனாவால் நீட்டிக்கப்பட்டது. 1991 முதல் காணாமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் மற்றும் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் என நம்பப்படுகிறவர்கள் மீதான அறிக்கைகளை ஆய்வு செய்யும் பிரத்யேகமான ஆணை கொண்ட விசாரணை ஆணையங்களின் நீண்ட வரிசையில் இது மிகவும் சமீபத்தியது ஆகும். தங்களுடைய உறவினர்கள் குறித்த தகவல்களை நாடும் ஆயிரக்கணக்கான குடும்ப உறுப்பினர்களின் குறைகளைக் கேட்டறிந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையத்தைப் (LLRC) போன்று விரிவான விசாரணைகளை இது மேற்கொள்ளவில்லை.

ஜூன் 2016-ன் படி, நல்லிணக்க முயற்சிகளுக்கான ஆலோசனைக் குழுவினர் முன்மொழியப்பட்டுள்ள இடைக்கால நீதி வழங்கும் அமைப்புகள் மீதான பிராந்திய கலந்தாலோசனைகளை இதுவரைத் தொடங்கவில்லை. மார்ச் மாதத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இதற்கான வலைத்தளம் தொடங்கப்பட்டது, ஆனால் இணையத்தை அணுகும் வசதி இல்லாதவர்களால் இதை அணுக இயலவில்லை. ஏப்ரல் 5 ஆம் தேதி உண்மையை அறிவதற்கும், நீதியைப் பெறுவதற்கும், மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புடைமையை உறுதி செய்வதற்கும், குறைதீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உரிய அமைப்புகள், செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றின் வடிவமைப்பு குறித்த எழுத்துப்பூர்வமான அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு ஆலோசனைக் குழு அழைப்பு விடுத்தது.[6] பொதுமக்களின் நம்பிக்கையையும், உரிமையையும் உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் அணுகக்கூடிய வகையில் விரிவான கலந்தாலோசனைகளை நடத்துவதற்கு சிறப்புப் பணிப்பிரிவுக்கு போதுமான வழிவகைகளும், நேரமும் இல்லை என்ற மக்களின் கவலைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். குறிப்பாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சி அளிப்பவர்களுக்கும் செயல்திறன் மிக்க, சுதந்திரமான பாதுகாப்புச் செயல்பாட்டு முறைகள் உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும், இதன் மூலம் அவர்கள் இந்தச்செயல்முறையில் பாதுகாப்பாகத் தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்கள்.

- *ஒரு செயல்திறன் மிக்க மனித உரிமைகள் தொடர்பான கூர்ந்தாய்வுத் திட்டத்தை உருவாக்குதல்*

மோசமான மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளதாக ஆதாரம் இருக்கும் பட்சத்தில் சட்ட அமலாக்க ஊழியர்கள் அல்லது இராணுவ ஊழியர்கள் பணியிலிருந்து நீக்கப்பட வேண்டும் அல்லது பணி செய்ய தடை விதிக்கப்பட வேண்டும்.

- *பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யும் நடவடிக்கையில் இருந்து அனைத்து நபர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் சர்வதேச உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துதல்*

இந்த உடன்படிக்கையில் கையொப்பம் இட்டு ஏற்புறுதி செய்துள்ளதால், நிலுவையில் உள்ள பல்லாயிரக்கணக்கான புகார்களுக்கு தீர்வு காண்பதற்கான ஒரு முக்கியப் படியாக இந்த நடைமுறைப்படுத்தும் செயல்முறையை அரசாங்கம் பூர்த்தி செய்து இது போன்ற நடைமுறைகள் ஒழிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.[7]

- *காணாமல் போன நபர்களுக்கான ஒரு செயல்திறன் மிக்க வெளிப்படையான அலுவலகம் அமைக்கப்படுவதை உறுதிசெய்தல்*[8]

‘காணாமல் போனவர்களுக்கான ஓர் அலுவலகம்’ அமைப்பதற்கான திட்டங்களுக்கும், காணாமல் போன குடும்பங்களுக்கு இறப்புச் சான்றிதழ்கள் வழங்குவதற்குப் பதிலாக காணாமல் போனவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் முன்மொழிவுக்கும் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. எனினும் இந்த இரண்டு முயற்சிகளும் இன்னமும் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை. திட்டமிடுதல் செயல்முறையின் போது கலந்தாலோசனை மேற்கொள்ளப்படவில்லை என பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கவலை தெரிவித்துள்ளன மற்றும் விசாரணைகளின் போது சேகரிக்கப்படும் தகவல்கள் பிற குற்றவியல் விசாரணைகளின் போதும், உண்மையை அறிந்து கொள்ளும் செயல்பாட்டு முறைகளின் போதும் மற்றும் இழப்பீடு பெறும் செயல்பாட்டு முறைகளின் போதும் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாமை ஆகிய நான்கு தூண்களுக்கும் வெளிப்படையான தன்மையும், அனைத்து செயல்பாட்டு

---

[6] நல்லிணக்க செயல்பாட்டு முறைகளை ஒருங்கிணைக்கும் தலைமைச் செயலகம், http://www.scrm.gov.lk/#!consultations/cjg9. இச்செயலகம் கோரிக்கைகளை சமர்ப்பிக்க ஒரு மாதத்திற்கும் குறைவான ஒரு குறுகிய கால அவகாசத்தை முதலில் வழங்கியது, ஆனால் இது பின்னர் 25 ஜூன் வரை நீட்டிக்கப்பட்டது.

[7] பலவந்தமாக அகற்றப்பட்ட மற்றும் காணாமல் போகச் செய்யப்பட்ட சில நபர்கள் தொடர்பான விசாரணையை மேற்கொண்ட அனைத்துத் தீவு விசாரணை ஆணையத்தால் அனுப்பப்பட்ட 318 சந்தேகிக்கப்படும் குற்றவாளிகளின் இரகசியப் பட்டியல் OSIL-ஆல் பெறப்பட்டது. இந்த ஆணையம் 10,136 புகார்களை ஆய்வு செய்து அதன் இறுதி அறிக்கையை 2001 ஆம் ஆண்டு சமர்ப்பித்தது.

[8] இலங்ககையில் காணாமல் போனவர்கள் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டார்கள் என்பதை ஒப்புக்கொள்ளும் விதத்தில் அலுவலகத்தின் பெயரை மாற்ற வேண்டும் என சமூக ஆர்வலர்களும், பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களும் கேட்டுக்கொண்டுள்ளனர். (‘முன்மொழியப்பட்டுள்ள காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் தொடர்பாக அதிபர் சிறீசேனாவிற்கு ஒரு வெளிப்படையான கடிதம்’ என்பதைப் பார்க்கவும்; இலங்கைச் சுருக்கம். 09 மே 2016, http://srilankabrief.org/2016/05/open-letter-to-president-sirisena-on-proposed-missing-persons-office/, 24 மே 2016 அன்று அணுகப்பட்டது)

முறைகளுக்கும் இடையேயான செயல்திறன் வாய்ந்த தகவல் பகிர்வும் மிகவும் முக்கியமானவை ஆகும். “காணமல் போனவர்கள்” குறித்த ஒரு மத்திய தரவுத்தளத்தை உருவாக்குவதற்கான திட்டங்களை அமைச்சரவை அறிவித்தது.[9]

- *தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குதல் (PTA)*

மிகவும் கடுமையான PTA-வை மாற்றியமைக்க வாக்குறுதி அளிக்கப்பட்ட நிலையில், அச்சட்டம் சர்வதேச தரங்களைப் பூர்த்தி செய்யவில்லை என்பதை ஒப்புக்கொண்டு, இலங்கை அரசாங்கம் தாமதமின்றி இச்சட்டத்தை நீக்க வேண்டும் மற்றும் குற்றவாளிகள் என சந்தேகப்படும் நபர்களைக் கைது செய்யவும், காவலில் வைக்கவும் இச்சட்டத்தைப் பயன்படுத்துவதை இலங்கை அரசாங்கள் நிறுத்த வேண்டும். இச்சட்டத்தில் உள்ள விரிவான அதிகாரங்கள் நியாயமற்ற பரவலான கைதுகள் மற்றும் நீண்ட காலம் காவலில் வைத்தல், சித்திரவதை செய்தல் மற்றும் பலவந்தமாக காணாமல் போகச் செய்தல் ஆகியவற்றுக்குப் பங்களித்தன. இது கருத்துச் சுதந்திரம், கூட்டமைப்புச் சுதந்திரம் மற்றும் நடமாடும் சுதந்திரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் 2016-ல் மட்டும் 20-க்கும் மேற்பட்ட PTA கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது, இந்நிகழ்வுகளில் கைது செய்யும் அதிகாரிகள் சாதாரணமான உடையணிந்து கொண்டு தங்களை அடையாளப்படுத்தி கொள்ள மறுத்துவிட்டதாக சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் புகார் கூறுகின்றனர்.

- *கைது செய்யப்பட்டவர்களுக்கு விசாரணையின் போது வன்கொடுமையில் இருந்து பாதுகாப்பு அளித்தல் உட்பட ஒரு வழக்கறிஞரை உடனடியாக அணுகுவதற்கான வசதியும் அளிக்கப்படுவதை உறுதி செய்தல்*

குற்றம் சாட்டப்பட்டவர் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதைத் தடுக்க போலிஸ் ஓர் ஆரம்பநிலை அறிக்கையைப் பதிவு செய்த பின்பு மேற்கொண்டு எந்த நடவடிக்கையையும் எடுக்காமல் அவருக்கு ஒரு வழக்கறிஞரை அணுகும் வசதி அளிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவருவதற்கான ஒரு முன்மொழிவு.

- *அடையாளமாக விளங்கும் மனித உரிமைகள் தொடர்பான வழக்குகளில் முன்னேற்றத்தைக் காண்பித்தல்*

வாக்குறுதிகள் மீண்டும் மீண்டும் அளிக்கப்பட்ட போதிலும், ஜனவரி 2006-ல் திரிகோணமலையில் சட்டத்திற்குப் புறம்பாக பாதுகாப்பு படைவீரர்களால் 5 மாணவர்கள் கொல்லப்பட்டதற்கோ அல்லது *பட்டினிக்கு எதிரான நடவடிக்கையில்* ஈடுபட்டிருந்த 17 உதவிப் பணியாளர்கள் ஆகஸ்ட் 2006-ல் கொல்லப்பட்டதற்கோ இதுவரை யாரும் பொறுப்பு ஏற்கவில்லை. தடுப்புக்காவலில் இருந்து வெளிவந்த சில மணி நேரத்திற்குள் காணமால் போன மனித உரிமைகளின் பாதுகாவலரான ஸ்டீபன் சுந்தரராஜ் விவகாரத்திற்கும் இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இதே போன்று வடக்குப்பகுதியில் பொதுமக்களை இராணுவம் வன்கொடுமைக்கு உள்ளாக்குவதை எதிர்த்து போராட்டம் நடத்த காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு உதவியதன் காரணமாக 2011 ஆம் ஆண்டு லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் என்ற அரசியல் ஆர்வலர்கள் பலவந்தமாக காணாமல் போகச் செய்யும் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டனர். அரசாங்கத்துடன் கருத்து வேறுபாடுகளைக் கொண்ட கார்ட்டூனிஸ்ட் பிரகீத் எக்நலிகோடா 2010-ல் காணாமல் போனார். அதற்கான காரணத்தை அறிய அவருடைய மனைவி சந்தியா எக்நலிகோடா இன்னமும் காத்துக்கொண்டிருக்கிறார். அவரை இராணுவத்தினர் தடுப்புக்காவலில் வைத்திருந்ததாக ஹேபியஸ் கார்ப்பஸ் செயல்முறைகளின் போது முன்வைக்கப்பட்ட ஆதாரம் எடுத்துரைக்கிறது. இது சம்பந்தமாக ஒன்பது இராணுவ உளவுத்துறை அலுவலர்கள் விசாரணையின் கீழ் உள்ளனர், ஆனால் இந்த வழக்கின் முன்னேற்றத்திற்கு இடையூறு ஏற்படுத்த மீண்டும் மீண்டும் அரசியல் ரீதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இந்த வழக்கு மெதுவாக நடத்தப்பட்டு வருகிறது.

- *உடனடியாக உதவி தேவைப்படும் பாதிக்கப்பட்டோருக்கு இடைக்கால இழப்பீட்டை அளிக்க ஒரு திட்டத்தை உருவாக்குதல்*

நாடு முழுவதும் பாதிக்கப்பட்டோருக்கு ஏற்பட்டுள்ள தீங்குகளை முழுமையாக அளவிட்டு, பாதிக்கப்பட்டோருடன் முழுமையாகக் கலந்தாலோசித்து ஓர் இழப்பீடு அளிக்கும் திட்டத்தை உருவாக்க அதிக காலம் ஆகும் என்பதை

---

[9] “24-05-2016 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட முடிவுகள்,” முடிவு 15, http://www.news.lk/cabinet-decusions/item/13413-decisions-taken-by-the-cabinet-of-ministers-at-its-meeting-held-on-24-05-2016 (26 மே 2016 அன்று அணுகப்பட்டது)

கண்டுணர்ந்த காரணத்தினால், தேசிய அளவிலான இழப்பீடு அளிக்கும் திட்டம் உருவாக்கப்படும் வரை உடனடியாக ஆதரவு தேவைப்படுபவர்களுக்கு உதவிட இடைக்கால நடவடிக்கைகள் கொண்ட ஒரு திட்டத்தை உருவாக்குவது முக்கியமானதாகும். இதில் மறுவாழ்வு, இழப்பீடு மற்றும் முரண்பாட்டின் போது இராணுவத்தால் பறிக்கப்பட்ட சொத்துக்களையும், நிலங்களையும் மீண்டும் அளித்தல் ஆகியவை உள்ளடங்க வேண்டும்.

- *நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களுக்கான சுதந்திரம் மற்றும் சித்திரவதை தொடர்பாக ஐ.நாவால் நியமிக்கப்பட்ட சிறப்பு விசாரணை அலுவலர்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல்*

தேசிய நீதி அமைப்பை வலுப்படுத்தவும், தேசிய நீதிமன்றங்கள் தண்டனையில் இருந்து விலக்கு அளிப்பதை செயல்திறனுடன் கையாளுவதை உறுதி செய்யவும் இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும்.

உயிர்நாடியாக விளங்கும் இந்தச் செயல்முறைக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பும், உறுப்பு நாடுகளும் பின்வருமாறு ஆதரவு அளிக்க வேண்டும்:

- அக்டோபர் 2015, மனித உரிமைக் கழக தீர்மானத்தில் வகுக்கப்பட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அதிகாரிகளை ஊக்குவித்து அதன் முன்னேற்றத்தையும், நடைமுறைப்படுத்துதலையும் கண்காணித்தல்;
- சட்டரீதியான சீர்திருத்தத்திற்கும், மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் எந்தப் பிற நடவடிக்கைக்கும், சர்வதேச தரங்களைப் பூர்த்தி செய்யும் நீதி, உண்மை மற்றும் இழப்புகளைச் சரிசெய்யும் செயல்பாட்டு முறைகளுக்கும் தொழிநுட்ப ரீதியான உதவியையும், நிதி ஆதரவையும் அளித்தல்;
- இது போன்ற உதவிகள் அனைத்தும் திறன்வாய்ந்த நிவாரணங்களைப் பெறுவதற்கான பாதிக்கப்பட்டோரின் உரிமைகளை வலியுறுத்துகிறது. அவை குறிப்பாக நீதி, உண்மை மற்றும் இழப்புகளைச் சரிசெய்தல் ஆகியவற்றை பெண்கள் அணுகும் வசதி மற்றும் மீண்டும் நிகழாது என்பதற்கான உத்திரவாதம் ஆகியவற்றைக் குறிக்கின்றன. இவை பாலினரீதியான மற்றும் பிற பாகுபாடுகளுக்கான அடிப்படை காரணங்களுக்கு தீர்வு அளிக்கின்றன;
- நீதி, உண்மை, இழப்புகளைச் சரிசெய்தல் மற்றும் மீண்டும் நிகழாது என்பதற்கான உத்திரவாதம் ஆகியவை திறம்பட அளிக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்ய ஆழ்ந்து சிந்திக்கும் செயல்பாட்டு முறைகள் ஒருங்கிணைந்து தகவல்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துதல்;
- பாதிக்கப்பட்டோரின் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்புக்காக சர்வதேச தரங்களின் படி ஒரு சுதந்திரமான மற்றும் செயல்திறன் வாய்ந்த அமைப்பை உருவாக்க இலங்கை அதிகாரிகளுக்கு உதவுதல்;
- நீதி, உண்மை மற்றும் இழப்புகளைச் சரிசெய்யும் செயல்பாட்டு முறைகளுடன் தொடர்பு கொண்டிருக்கும் காரணத்தினால் மோசமான ஆபத்துகளை எதிர்நோக்கியிருக்கும் பாதிக்கப்பட்டோரையும், சாட்சிகளையும் மீண்டும் குடியமர்த்த இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொள்தல்;
- உள்நாட்டு நோக்கங்களுக்காக, சட்ட அமலாக்க முகமைகளுக்கும், இராணுவத்தினருக்கும் மனித உரிமைகள் தொடர்பான ஒரு கூர்ந்தாய்வு திட்டத்தை உருவாக்க இலங்கைக்கு உதவி செய்தல் மற்றும் அனைத்து இலங்கைப் பணியாளர்களும் ஐநாவின் அமைதி காக்கும் நடவடிக்கைகளிலும், பயிற்சி அல்லது பரிமாற்றத் திட்டங்களிலும் பங்களிக்க வேண்டும் என வலியுறுத்துதல்;
- வழக்கில் நியாயமான பாதுகாப்புகள் மற்றும் தூக்குத் தண்டனையை தவிர்த்தல் உட்பட சர்வதேச சட்டத்தின் கீழ் அல்லது பிற மோசமான மனித உரிமை மீறல்களின் கீழ் குற்றவாளிகளாக சந்தேகிக்கப்படும் நபர்கள் மீது வழக்கு தொடுக்க விரும்பும் இலங்கை நீதிமன்றங்கள் அல்லது கலப்பு நீதிமன்றங்களுக்கு ஒத்துழைப்பையும், பரஸ்பர சட்டரீதியான உதவியையும் அளித்தல்;
- இலங்கையில் OHCHR அலுவலகத்தை உருவாக்க ஆதரவு அளித்தல்.